அடிப்படை நோக்கம் 800-லிருந்து 1,200 வரையில் அடங்கும் அளவுக்கு இருக்குமேயானால் அங்கே வாக்குச்சாவடிகளை வைக்கலாம் என்ற அளவில் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை தேர்தலுக்குத் தேர்தல் பெருகிக் கொண்டுதான் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 648, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

648—

தீண்டாமை ஒழிப்பு குற்றங்களை விசாரிக்க நாகப்பட்டினத்தில் நீதிமன்றம்.

* 8350— திரு. து. மூர்த்தி:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பு குற்றங்களை பற்றி விசாரிப்பதற்கு நாகப்பட்டினத்தில் ஒரு நீதிமன்றத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தீண்டாமை ஒழிப்பு குற்றங்களைப் பற்றி விசாரிப்பதற்கு நாகப்பட்டினத்தில் ஒரு தனி குற்றவியல்நீதிமன்றத்தை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தீண்டாமை அதிகமாகப் பெருகி இருந்தது. ஆனால், இன்றைக்கு தமிழகத்தினுடைய காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தீண்டாமை எவ்வளவோ மிகவாகக் குறைந்திருக்கிறது. எனவே, இந்த தீண்டாமை குற்றங்களை ஒழிப்பதற்கும், அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் நாகப்பட்டினம் — காயிதே மில்லத் மாவட்டம் நாகப்பட்டினத்தில் தீண்டாமைக் குற்றங்களை ஒழிப்பதற்கு ஒரு தனி குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அந்த நீதிமன்றம் எப்பொழுது செயல்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Protection of Civil Right Courts என்ற வகையில் தீண்டாமைக் குற்றங்களை விசாரிப்பதற்காக

தமிழ்நாட்டில், மதுரை, திருச்சி, கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இப்பொழுது செயல்படுகிறது. அடுத்து, போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நாகப்பட்டினத்திலேயும், கோயம்புத்தூரிலேயும் இரண்டு Protection of Civil Rights Court-ஐ தீண்டாமை வழக்குகளைப் பரிசீலனை செய்து தீர்ப்பதற்காக விரைவில் உருவாக்க இருக்கிறார்கள் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கிடையில், தீண்டாமை ஒழிப்புக் குற்றங்களை மற்ற மாவட்டத் தலை நகரங்களில் இருக்கின்ற செஷன்ஸ் கோர்ட்டுகளில் இந்த நான்கு இடங்கள் தவிர, மற்ற இடங்களில் தீண்டாமைக் குற்றங்களை விசாரிப்பதற்கு, செஷன்ஸ் கோர்ட்டிற்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தனி நீதிமன்றங்கள் அமைக்கின்ற வரையில் என்று இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீண்டாமை ஒழிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கோர்ட்டுக்கு வருகின்றபோது அந்தக் கோர்ட்டு தீர்ப்பு அளிக்கின்ற காலம் ஏறத்தாழ 2 ஆண்டு, 3 ஆண்டு காலம் வரையிலும் காலதாமதம் ஆகின்றது. இதனால் சாதாரண ஏழை எளிய மக்கள் இப்படிக் காலதாமதம் ஆகின்ற காரணத்தினால் அவர்கள் அலைந்து பார்த்துவிட்டு, கடைசியில் இங்கே போனால் ஒன்றும் நடக்காது என்று அலுத்து விடுகிறார்கள். ஆகவே, ஒரு காலத்தை வரையறுத்து, அந்தக் காலத்திற்குள் இந்த வழக்குகளை முடிக்க வேண்டுமென்று அரசு கால நிர்ணயிப்புச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே காலவரையறை இருக்கிறது. ஆனால், நீதிமன்றங்களுடைய செயல்பாடுகளில் சில சுணக்கங்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த எண்ணம் நிறைவேறாமல் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மையமாக கொண்டு, நீதிமன்றங்களுக்கு துரிதமாக வழக்குகளைப் பைசல் செய்ய அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 649. திரு. இராம. இராமநாதன். இருக்கையில் இல்லை.

வினா எண் 650, டாக்டர் வெ. புருஷோத்தமன் திரு. ச. புரட்சிமணி, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.